| | | |
|---|---|---|
| அ.வ.எண். | : | **89/2018** |
| தேதி | : | **22.01.2026** |
| பெயர் | : | பாஸ்கரன் த/பெ பழனி படையாட்சி |

வா.த.சா.1 (PW1) திரு. பாஸ்கரன் த/பெ பழனி படையாட்சி என்பவர் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது. (சாட்சியின் அடையாளம் ஆதார் அடையாள அட்டையின் மூலம் உறுதி செய்யப்பட்டது. )

**<u>வா.த.சா.1. (PW1) – குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

1. பிரதிவாதி நிறுவனம் தனது பதில் உரையில் தாக்கல் செய்த விவரங்கள் எனக்கு தெரியும். மேற்படி பதில் உரையில் என்னை பற்றி கூறியுள்ள குற்ற சாற்றுகள் பற்றி எனக்கு தெரியும். ஒழுங்கு நடவடிக்கை குழு என்னை விசாரித்து அவர்கள் வழங்கிய பரிந்துரையின் பேரில் தான் என் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதி நிறுவனத்தில் நான் மேலாளராக பணிபுரிந்தேன் என்றால் சரிதான். பிரதிவாதி நிறுவனத்தில் மேலாளர் பொறுப்பில் இருப்பவர்களுக்கு ஓய்வு பெறுகின்ற வயது 55 ஆகும். அதன் பிறகு நிறுவனம் நினைத்தால் 5 ஆண்டுகள் பணி நீட்டிப்பு வழங்கலாம்.

2) பிரதிவாதி நிறுவனத்தில் யாருக்காவது பணி நீட்டிப்பு வழங்கிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். திலீப் என்பவருக்கு அவ்வாறு வழங்கியுள்ளார்கள். என்னுடைய வயது தற்போது 56 ஆகும். மேற்கூறிய குற்ற வழக்கில் நான் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் முன்ஜாமீன் வாங்கியுள்ளேன். அந்த வழக்கில் தற்போது வரை அழைப்பாணை எனக்கு எதுவும் சார்பு செய்யவில்லை. அந்த வழக்கில் நான் குற்றவியல் நடுவர்நீதிமன்றத்தில் நான் ஆஜராகததால் என் மீது பிடி ஆணை நிலுவையில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது.

3) என் மீது மேலே சொன்ன குற்ற வழக்கானது நான் பிரதிவாதி நிறுனத்தை மோசடி செய்ததற்காகவும், துஷ்பரியோகம் செய்ததற்காகவும் பதியப்பட்டது என்றால் சரியல்ல. என் மீது குற்றச்சாட்டுகள் உறுதியானதால் தான் பிரதிவாதி நிறுவனம் என்னை வேலையில் இருந்து அனுப்பிவிட்டார்கள் என்றால் சரியல்ல. ஒரு நிறுவனத்தின் மேலாளர் என்ற முறையில் நான் வேலையை உண்மையாகவும்,

நாணயமாகவும் உழைக்கவேண்டும் என்றால் சரிதான். குற்ற வழக்கு நிலுவையில் இருப்பதை நான் மறைத்து இந்நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரியல்ல. அவ்வாறு தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

4) எனக்கு தற்போது வேறு ஏதும் வருமானம் இல்லை. பிரதிவாதி நிறுவனம் என்னை பணியில் இருந்து நீக்கிய காலத்தில் சுமார் 2 வருடமாக எனது நண்பர் அலுவலகத்தில் உதவியாளராக பணியில் இருந்துவருகிறேன். அது நிரந்தர வேலை அல்ல. என்னை பணியில் இருந்து நீக்கிய அடுத்த மாதமே இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பொதுவாக ஒரு நிறுவனத்தில் ஒருவரை பணியில் நியமிக்க வேண்டும் என்றால் அவருடைய நன்னடத்தை விவரங்கள் சரியாக இருந்தால் மட்டும் தான் பணியில் அமர்த்துவார்கள்.

5) குற்ற வழக்கு என் மீது நிலுவையில் இருப்பதால் பிரதிவாதி நிறுவனத்தில் எனக்கு திரும்ப பணியில் அமர்த்துவது சரியாகாது என்றால் சரியல்ல. அப்படி பணிஅமர்த்தினால் பிரதிவாதி நிறுவனத்தின் புகழுக்கு இழுக்கு ஏற்படும் என்றால் சரியல்ல. நான் எனது நிறுவனத்தில் சுற்றுசூழல் துறையில் மேலாளராக பணியில் இருந்தேன். எனது துறை சம்பந்தமாக நிறுவனத்திற்கு தேவையான பொருட்கள் எனது உத்தரவின் பேரில் தான் நிறுவனத்திற்கு வரும் என்றால் இல்லை. அது சம்பந்தமாக தனியாக ஒரு குழு உள்ளது அவர்கள் தான் அதை நிர்ணயம் செய்வார்கள்.

6) நிறுவனத்திற்கு தேவையான ஒப்பந்தங்களை கோரும் போது அந்த பொருட்கள் நிருவணத்திற்கு அனுப்ப முன்வரும் நிறுவனங்கள் தொடர்பாக நான் பரிந்துரைகள் தருவேன் என்றால் நான் மேல் சொன்ன குழுவிற்கு அனுப்பிவிடுவேன். அந்த குழுக்கள் திட்டமிடும் குழு மற்றும் நிதி குழு ஆகிய குழுக்களுக்கு சென்று அவர்கள் அனுமதி அளித்த பின்னர் தான் பரிவர்த்தனை நடைபெறும். நிறுவனத்திற்கு தேவையான ஒப்பந்தங்கள் வெளிப்படையாக இருக்கும் என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தப்பள்ளிகள் நிறுவனத்திற்கு சாதகமாகவும் மற்றும் தகுதி வாய்ந்த நிறுவனங்களின் புள்ளிகள் மட்டும் தான் ஏற்கப்படும்.

7) அந்த ஒப்பந்தப்புள்ளிகளை நிறுனம் தான் இறுதி முடிவு எடுக்கும் என்றால் சரிதான். நிறுவனத்தின் இறுதி முடிவு அறிக்கையின் பேரில் தான் இருக்கும்

என்றால் சரிதான். நிறுவனத்தில் உள்ள ஏதேனும் ஒரு குழு தவறான தகவல் தந்தால் அது நிறுவனத்திற்கு தான் இழப்பு ஏற்படும் என்றால் சரிதான். ஒப்பந்தப்புள்ளிகளில் பரிந்துரைக்கப்பட்ட அறிக்கையை சரிபார்த்து அது சம்பந்தமான அறிக்கை வழங்கும் அதிகாரம் என்னிடம் இருந்ததா என்றால் இல்லை.

8) Perfect Enviro Services, Aqua Matrix ஆகிய இரண்டு நிறுவனத்தின் ஒப்பந்த புள்ளிகள் என்னால் சரிபார்க்கப்பட்டதா என்றால் இல்லை. Aqua Matrix ஒப்பந்தபுள்ளி தொகை ரூபாய் 26.6 கோடி என்று குறியீடு செய்யப்பட்டிருந்த விவரம் எனக்கு ஞாபகம் இல்லை. Perfect Enviro Services அவர்கள் வழங்கிய ஒப்பந்தப்புள்ளி தொகையும் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி இரு நிறுவனங்களும் பிரதிவாதி நிறுவனத்தில் தண்ணீர் சுத்திகரிப்பு மெசின்கள் நிறுவுவதற்கு தொகை ஒதுக்கப்பட்டிருந்ததா என்றால் எனக்கு நினைவு இல்லை.

9) இரு நிறுவனங்களிலும் உள்ள தொகை வேறுபாடு எனக்கு தெரியாது என்பதால் அதை நான் நிறுவனத்திடம் கூறியிருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். மேற் சொன்ன இரு நிறுவனங்களிலும் Aqua Matrix நிறுவனத்தில் ஒப்பந்தப்புள்ளியை RO சம்பந்தமான தொகை இருந்தது என்றும், Perfect Enviro Services நிறுவனத்தில் ஒப்பந்தப்புள்ளியை RO சம்பந்தமான தொகை இல்லாமல் இருந்தது என்றும் என்ற விவரம் எனக்கு தெரியும் அதை நான் நிறுவனத்திடம் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

10) RO சம்பந்தமான தொகை Perfect Enviro Services நிறுவனத்தில் குறியீடு செய்யப்படாததால் தான் மற்றொரு நிறுவனமான Aqua Matrix நிறுவனத்தின் குறியீடு தொகையை விட குறைவாக இருந்தது என்றால் சரியல்ல. அந்த குறியீடு சரிபார்ப்பு செய்யவேண்டிய பொறுப்பு என்னிடம் இருந்தது என்றும் அதை நான் சரியாக செய்யாமல் நிறுவனத்திடம் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல. நான் சரிபார்ப்பு விஷயங்களை நிறுவனத்திடம் சரியாக கூறாததால் அவர்கள் எடுத்த முடிவு தவறாகிவிட்டது என்றால் சரியல்ல.

11) நான் செய்த பரிந்துரை மற்றும் குளறுபடியால் தான் ஒப்பந்தப்புள்ளி Perfect Enviro Services நிறுவனத்திற்கு சாதகமாக சென்றது என்றால் சரியல்ல. இதனால் Perfect Enviro Services நிறுவனத்திற்கு ரூபாய் 28 கோடி தொகைக்கு ஒப்பந்தம் கொடுக்கப்பட்டது என்றால் தொகை நினைவில் இல்லை. நான் செய்த இத்தவறால்

நிறுவனத்திற்கு ரூபாய் 1.6 கோடி இழப்பு ஏற்பட்டது என்றாலும் அந்த இழப்பிற்கு நான் தான் காரணம் என்றாலும் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

**சாட்சி கையொப்பம் : Sd/. பாஸ்கரன்**

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. P. Jagadeeswaran.
District Munsif,
Sriperumbudur.